பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று (28.04.2025) தலைமைச் செயலகத்தில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக தேர்வு செய்யப்பட்ட 18 முதுகலை ஆசிரியர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு. பி. சந்தரமோகன், பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (மேல்நிலை) திருமதி ஞானகௌரி ஆகியோர் உடனிருந்தனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (28.04.2025) சென்னை, அரசு மருத்துவக்கல்லூரி (மு) இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில், காது, மூக்கு, தொண்டை பிரிவு முன்னாள் இயக்குநர் பேராசிரியர் மரு.முத்துக்குமார் இயற்றிய செவி எலும்பு அறுவை சிகிச்சைப் பயிற்சி திறன் கையேட்டினை வெளியிட்டார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. சங்குமணி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சாந்தாராம். துணை முதல்வர் மரு.கவிதா. காது, மூக்கு, தொண்டை நிலைய இயக்குநர் பேராசிரியர் மரு.சுரேஷ்குமார். பேராசிரியர் மரு.பாரதிமோகன் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள் உடனிருந்தனர்.

என்.எல்.சி. நிறுவனத்தில் தொழிற்சங்கங்களுக்கான

அங்கீகாரத் தேர்தலில் தொ.மு.ச. முதன்மைச் சங்கமாக வெற்றி!

சட்டப் பேரவையில் – நெய்வேலி தொகுதி சபா.இராசேந்திரன் பேச்சு!

சென்னை, ஏப். 29 - சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது நெய்வேலி தொகுதி உறுப்பினர் சபா.இராசேந்திரன், என்.எல்.சி. நிறுவனத்தின் தொழிற்சங்கங்களுக்கான அங்கீகாரத் தேர்தலில் தொ.மு.ச. முதன்மை சங்கமாக வெற்றி பெற்றுள்ளது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இதுபற்றிய விவாதம் வருமாறு:-

சபா. இராசேந்திரன்:

நெய்வேலி தொகுதி, மேலிருப்பு நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன்:

கடலூர் மாவட்டம், மேலிருப்பு ஊராட்சி, பெரியகாட்டுப்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மேலிருப்பு முழுநேர நியாய விலைக் கடை தற்போது அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

சபா. இராசேந்திரன்: புதிய கட்டடம் கட்டப்பட வில்லை என்று சொன்னாலும், பழைய கட்டடத்தை சீரமைத்துக் கொடுத்திருக்கிற நமது கழக அரசுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நேற்று நடை பெற்று முடிந்திருக்கிற NLC நிறுவனத்தில் தொழிற்சங்கங்களுக்கான அங்கீகாரத் தேர்தலில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் முதன்மைச் சங்கமாக வெற்றி பெற்றிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மாபெரும் வெற்றிக்கு வழிகாட்டியாக இருந்த முதல்வர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) துணை முதல்வர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாவட்ட அமைச்சர்கள் வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர், எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களுக்கும், தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அண்ணன் சி.வி.கணேசன் அவர்களுக்கும், கூட்டணி தோழமைக் கட்சியினுடைய தலைவர்களுக்கும், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையினுடைய செயலாளர் உள்ளிட்ட நிர்வாகிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் முதல்வன் திட்டத்தில் படித்த மாணவர்கள் வெற்றி!

அதேபோல எனது நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் உள்ள சிலந்திநாதன் பேட்டை ஊராட்சியில் I.A.S., தேர்வில் இரண்டு பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதிலே சரண்யா

சரவணன் என்பவர் 125வது இடத்திலும், ராஜபிரபு என்ற மாணவர் 744வது இடத்திலும் பெற்று, வெற்றி பெற்றிருக்கிறார்கள். இதிலே சிறப்பு என்வென்று சொன்னால் இந்த இரண்டு மாணவர்களும் முதல்வர் அவர்களுடைய பெருமை மிகு திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் பயன் பெற்றிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற செய்தியை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நான் அவர்களை சென்று வாழ்த்தி விட்டு வருகின்றபோது அந்த இரண்டு மாணவர்கள் இருவரும் முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்க சொல்லி சொல்லியிருக்கிறார்கள். எனவே, உறுப்பினர் அன்பழகன் அவர்கள் நேற்று பேசும் போது நூறு ஆண்டு வாழ்க என்று வாழ்த்தியிருக்கிறார்கள். அந்த மாணவர்கள் அதையும் தாண்டி, முதல்வர் அவர்கள் நூறு ஆண்டுகளுக்கு மேலாக வாழ வேண்டுமென்று வாழ்த்து கிறார்கள், நன்றித் தெரிவிக் கிறார்கள் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த subjectக்கு வருகின்றபோது அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியிலே இரண்டு பகுதிக்கு, பகுதிநேரக் கடைகளை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விசூர் ஊராட்சியில் மணலூர் காலனி என்பது 5 கிலோ மீட்டர் தூரம் சென்று ரெட்டிப்பாளையம் கடையில் இருந்து அவர்கள் பொருள்கள் வாங்கவேண்டியது இருக்கிறது. அதில் 120 card தான் இருக்கிறது என்றாலும் சிறப்பு நேர்வாக கருதி அந்தப் பகுதி நேர நியாயவிலைக் கடையை அமைத்துத்தரவேண்டும். அதேபோல கீழ்மாம்பட்டு ஊராட்சியில் முத்தரசன் குப்பம் பகுதியில் 968 card உள்ள அந்த பகுதியில் ஒரு முழுநேர நியாய விலைக் கடை அமைத்துத் தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களை, தங்கள் வாயிலாக கேட்டு அமருகிறேன்.

அமைச்சர் கேஆர். பெரியகருப்பன்: உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே புதிய கட்டடம் வேண்டுமென்று கேள்வியை எழுப்பியிருந்தார். அவருடைய அந்தக் கேள்வி இங்கே வருவதற்கு முன்னதாகவே, அந்தக் கடை பழுது நீக்கப்பட்டு, இப்போது அது புது பொலிவோடு இருக்கிறது. அதைத் தொடர்ந்து இப்போது பகுதிநேர கடை இரண்டு வேண்டுமென்று கேட்டிருக்கிறார், குறிப்பாக அந்தக் கடைகளை நாம் பிரிக்கின்ற நேரத்தில் சில விதிமுறைகள் அங்கே இருக்கிறது. அது ஏற்கெனவே நடைமுறையில் இருக்கிறது அந்த விதிகளையும் நாம் பார்க்கவேண்டியிருக்கிறது. திருவாமூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் இரண்டு கடைகள் ஏற்கெனவே இருக்கிறது. அதில் விசூர் முழுநேரக்கடை, அதில் ஏற்கெனவே 640 குடும்ப அட்டைகள் உள்ளன. அதில் இருந்து இரண்டு பகுதிநேர கடைகள் ரெட்டிப்பாளையம், நன்னிக்குப்பம் என இரண்டுகள் 474, 210 ஆகிய எண்ணிக்கையில் குடும்ப அட்டைகள் இருக்கிறது. ரெட்டிப்பாளையம் பகுதி நேரக் கடையில் இருந்து மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டு சொல்லியிருக்கின்ற மணலூர் காலனியில் கடையில் 94 cardதான் இருக்கிறது. ஆனால் தூரத்தைப் பொறுத்தவரை 5 கிலோமீட்டர் தொலைவு இருக்கின்ற காரணத்தாலே சிறப்பு நிகழ்வாக எடுத்துக்கொண்டு, எதிர்காலத்தில் அதை செய்வதற்கு வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

சபா. இராசேந்திரன்: கடைகளைப் பிரித்து தருகிறேன் என்று அறிவித்து இருக்கிற அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவுத் துறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிற சர்க்கரை ஆலைகளை நவீனப்படுத்துகிற திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை கேட்டு அமருகிறேன்.

அமைச்சர் கேஆர். பெரியகருப்பன்: சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரை நம் முடைய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் உரிய விடையை தனி கேள்விக்கு பதில் அளிப்பார்கள்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

பம்மல் தெற்கு பகுதி வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் திருமதி ஜி.காயத்ரியின் கணவரும் முரசொலியின் கட்டுரை எழுத்தாளருமான திராவிட சிந்தனையாளர் சு.விஜயபாஸ்கர் பட திறப்பு நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, பம்மல் பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு, கஜேந்திரன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாணவரணி பிரபு, சத்யா பிரபு, ரவிச்சந்திரன்,நிர்வாகிகள் பெருந்திரலாக கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

சென்னை வட கிழக்கு மாவட்ட செயலாளர் மற்றும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ் சுதர்சனம் எம். எல்.ஏ புழல் ஒன்றிய பொறுப்பாளர் ச.அற்புதராஜ் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி மதன்குமார் ஆகியோர் ஆலோசனைபடி புழல் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ம.குறளரசன் ஏற்பாட்டில் மக்களை கோடை வெப்பத்தில் காக்க நீர், மோர்,தர்பூசணி, வெள்ளரிக்கா, குளிர்பானம் வழங்கப்பட்டது. உடன் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் செ.யுவராஜ் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டேவிட் நாவலன், மணிமாறன், ஐயப்பன், பிரேம்குமார், அஸ்வின், கிளை செயலாளர் சி.சுதாகர்,மாவட்ட அதீதிராவிடர்நலகுழு துணை அமைப்பாளர் ம. மணி,குப்பாமணிதொப்பு கிளை செயலாளர் ஜி.தினேஷ், பி.மணிகண்டன், ஏ.வினோத், ஆர். அதியமான், எஸ்.இளங்கோவன், ராஜி,சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சித்திரை மாதம் - பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று

சார்பதிவாளர் அலுவலகங்களில் கூடுதல் முன்பதிவு வில்லைகள்!

பத்திரப் பதிவுத் துறை அறிவிப்பு!

சென்னை, ஏப். 29 - பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று சித்திரை மாதத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு என்று பத்தரிப் பதிவுத் துறை அறிவித் துள்ளது.

இது குறித்து பத்திரப் பதிவுத் துறை வெளியிட்டுள்ள செய்தி வருமாறு:-

மங்களகரமான தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொது மக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப் பட்டு வருகிறது .

தற்போது சித்திரை மாதத்தின் மங்களகரமான தினமான 30.04.2025 அன்று அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

இதனை ஏற்று சித்திரைமாதத்தின் மங்களகரமானதினமான 30.04.2025 அன்று ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுக்கு கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொது மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை வட கிழக்கு மாவட்ட செயலாளர் மற்றும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ் சுதர்சனம் எம். எல்.ஏ புழல் ஒன்றிய பொறுப்பாளர் ச.அற்புதராஜ் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி மதன்குமார் ஆகியோர் ஆலோசனைபடி புழல் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ம.குறளரசன் ஏற்பாட்டில் மக்களை கோடை வெப்பத்தில் காக்க நீர், மோர்,தர்பூசணி, வெள்ளரிக்கா, குளிர்பானம் வழங்கப்பட்டது. உடன் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் செ.யுவராஜ் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டேவிட் நாவலன், மணிமாறன், ஐயப்பன், பிரேம்குமார், அஸ்வின், கிளை செயலாளர் சி.சுதாகர்,மாவட்ட அதீதிராவிடர்நலகுழு துணை அமைப்பாளர் ம. மணி,குப்பாமணிதொப்பு கிளை செயலாளர் ஜி.தினேஷ், பி.மணிகண்டன், ஏ.வினோத், ஆர். அதியமான், எஸ்.இளங்கோவன், ராஜி,சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ச.அரவிந்த் ரமேஷ் தலைமை! தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி. முன்னிலை

பாலவாக்கம் க.சோமு மனைவி எஸ்.வசந்தி திருவுருவப் படம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்!

சென்னை, ஏப்.29- சென்னை தெற்கு மாவட்டம் - தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினரும், பாலவாக்கம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவருமான பாலவாக்கம் க.சோமுவின் மனைவி திருமதி எஸ்.வசந்தி அவர்களின் திருவுருவப்படத் திறப்பு நிகழ்ச்சி இன்று (29.4.2025- செவ்வாய்க்கிழமை) இரவு 7 மணிக்கு பாலவாக்கம் வசந்தி சோமு இல்லத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு லயன் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

திருமதி. எஸ். வசந்தி அவர்களின் திருவுருவப் படத்தை மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்.

முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மேயர் ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், த.விஸ்வ நாதன், எஸ். வி.ரவிச்சந்திரன், வி.இ. மதியழகன், மு.மனோகரன், பி.எஸ்.ஆறுமுகம், தா.விஜயபாலன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சிக்கு வருகை தருவோரை டாக்டர் தமிழரசி சோமு, டாக்டர் பிரபாகரன் சோமு ஆகியோர் வரவேற்கின்றனர்.

ந.உதயன் தலைமையில்

123வது வட்டத்தில் தண்ணீர் பந்தல் !

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு திறந்து வைக்கிறார்!

சென்னை, ஏப்.29 சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா மயிலை மேற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ந.உதயன் தலைமையில் மோர், பழரசம், பழங்கள் வழங்கும் விழா இன்று (29.04.2025 செவ்வாய்கிழமை) காலை 11.30 மணியளவில் திருவள்ளுவர் சாலை சந்திப்பு வ உசி தெரு , தேனாம்பேட்டை சென்னை18 இல் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளர்கள் நந்தனம் கி.மதி எம்.சி. எஸ். முரளி மற்றும் ராஜா அன்பழகன் எம்.சி. மு.இ.ஏழுமலை, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தினேஷ்மாணிக்கம், த. விக்னேஸ்வரன் எஸ்.உமா சங்கர், சி.பிரகாஷ், எ.அஸ்வின் குமார், மற்றும் பகுதி அமைப்பாளர்கள் சீ.வி. திவான் குமார், டி.ஜெகதீஷ் பாபு ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ.. தூத்துக்குடி எஸ். ஜோயல், ஆகியோர் தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொது மக்களுக்கு மோர், பழங்கள் வழங்கின்றனர்.

மேலும், தூத்துக்குடி எஸ். ஜோயல், வட்ட செயலாளர்கள் ராஜவேலு, . கிருஷ்ணமூர்த்தி,

எஸ். ஆர். ராஜாசுரேஷ் குமா அ.நாகராஜன் மூ.இராஜேந்திரன் ஏ.தாஸ், மா. பா.அன்பு. அ.தவநேசன், வி.வெற்றிவேல், கோ. கண்ணன் துரைப்பார்த் திபன், பா.பொன்னுசாமி, மற்றும் மாநில, மாவட்ட, பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள்: அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர் கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

மயிலை மேற்கு கிழக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நீ. ஜெ யக்குமார் ர.இளையக்குமார் எ சூர்யா ஜெ ராஜேஷ்குமார் அரவிந்த் ரமேஷ் கு.லோகேஷ் அ.அரவிந்த் ரமேஷ் தா.தீபன் வேஹேமநத்குமார். பா.முருகேசன் ஏ குட்டி மு.நிரஞ்சன் சாய் சுந்தர் ரகு ஆகியோர் நன்றி கூறிகின்றனர்.

கழகத் தலைவர் பிறந்தநாள் முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் பொன்னேரி நகர விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் தமிழ்நாடு அளவிலான மாபெரும் கிளப்புகளுக்கு இடையேயான குத்துச்சண்டை போட்டி நடைபெற்றது இதில் திருவள்ளூர் காஞ்சிபுரம் சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து 500க்கும் மேற்பட்ட குத்துச்சண்டை வீரர்கள் பங்கேற்றனர் இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் போட்டியை தொடங்கி வைத்து வெற்றி பெற்று அணிகளுக்கு பரிசுகள் கோப்பைகள் வழங்கினார் உடன் மாவட்ட அவை தலைவர் பகலவன், நகர கழக செயலாளர் ரவிக்குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ராஜேஷ் நகர விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பிரேம்சேகர் நகர இளைஞரணி அமைப்பாளர் மா.தீபன், , உள்ளிட்ட பலர் உள்ளனர்

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு தெற்கு பகுதி 30 அ வட்ட கழகத்தின் சார்பில் ஆயிரம் பேருக்கு நீர் மோர் தர்பூசணி குளிர்பானம். தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தலை வட்டக் கழக செயலாளர் டி. சுந்தரம் ஏற்பாட்டில் மாதவரம் மண்டல குழு தலைவர் எஸ் நந்தகோபால் திறந்து வைத்தார். உடன் வட்ட செயலாளர் எம் சரவணன், குட்டி மோகன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் ஜி. பார்த்தசாரதி, இ.இராமன் ஏ.வி.முருகன், எஸ்.என்.ராஜி, பி.எஸ்.என்.எல்.தயாளன் கவிப்பிரியா, வெங்கட்ராமன் கருணாநிதி காஞ்சி சண்முகம் உமா மகேஸ்வரி ஜி.ஜே தசரதன் ரயில்வே ஸ்ரீதர் வேலுசாமி எம்.சேகர், எஸ்.என்.கோதண்டன், பி விக்னேஷ், வி பாஸ்கர், தனசேகர், கஜேந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்